Reg sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15






# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்:389


புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து, வெளிவரும் எவர்பிறைற் சோப்பை பாவியுங்கள்


பிறேமா தொழிற்சாலை-பருத்தித்துறை


மலர் 13 ஆனி 2 ரபி:ஆகி 22 (16—6—71) புதன்கிழமை இதழ் 124

# வட பகுதியில் பனங்கட்டி உற்பத்தி நிலையங்கள்

## தோட்டத் தொழில் அமைச்சு விரைவில் நிறுவ முடிவு

கோட்டை, புதன்

**யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் ஐந்து பனங்கட்டி உற்பத்தி நிலையங்களை அரசாங்கம் நிறுவவிருக்கிறது இத்தகவலை அரசாங்கம் நேற்று அறிவித்தது.**

பனைமர உற்பத்திப் பொருட்களை நாடு பூராவும் விருத்தி செய்யும் முகமாக இந்த நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. பனம் பொருள் உற்பத்திபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட விசேஷகுழு தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. இதில் பனை உற்பத்திப்பொருள்கள் நாடுபூராவும் விரிவுபடுத்தவேண்டிய அவசியம்பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பதநீர் இறக்கும் காலமில்லாத செப்டம்பர் மாதம் முதல் ஜனவரிமாதம் வரையிலான காலப்பகுதியில் அதிகளவு பனம்பொருள் பொருட்களை உற்பத்திசெய்யலாம் என்று தோட்டத்தொழில் அமைச்சு கருதுகிறது பனை ஓலைகளைக்கொண்டு செய்யப்படும் ... குடிசைக் கைத்தொழில் நிறுவுவதன் மூலமும் பனம் பொருள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் பனங்கட்டி உற்பத்தி நிலையங்களுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்

## தமிழ்மொழி பயிற்றல் ஆராய்ச்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் மொழி பயிற்றல் பற்றிய ஆராய்ச்சிக் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 13ந் திகதி முதல் மூன்று நாட்களாகக் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது. கோப்பாய், ... புத்தளை, மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, அழுத்கமம் ஆகிய ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்களும் விரிவுரையாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

ஆசிரிய கலாசாலைகளின் பிரதம கல்வியதிகாரி திரு. நூனின் தொடக்கவுரை நிகழ்த்தி ஆரம்பித்துவைத்தார். கலாநிதி சா. சிவத்தம்பி, கலாநிதி ச. கைலாசபதி, கலாநிதி சா. சுசீந்திரராசா ஆகியோர் முறையே மொழி பயிற்றல், இலக்கியம் கற்பித்தல், மொழியியல் என்னும் விடயங்கள் பற்றிப் பல விரிவுரைகள் நிகழ்த்தினர்.

மேலைநாடுகளில் விஞ்ஞான உளவியல் அடிப்படையில் மொழி கற்பித்தல் பற்றி வளர்ந்துவரும் கொள்கைகள் பற்றியும், ஆய்வுகள் பற்றியும், கற்பித்தல் முறைகள் பற்றியும், தமிழ் கற்பிப்போர் மேற்கொள்ள வேண்டியன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

"பேச்சு மொழியும் எழுத்து மொழியும் மிகமிக வேறுபட்டுச் செல்கின்றன. இந்தியத் தமிழும், இலங்கைத் தமிழும் ஒருவர் பேச்சை ஒருவர் புரிந்துகொள்ளமுடியாத நிலைக்கு வந்துவிட்டன. இலங்கையிலும் பிரதேச மொழிகள் மிகமிக மாறுபட்டுச்செல்கின்றன. இந்நிலையில் தமிழ் ஆசிரியர்கள் மிக்க விவேகத்துடன் நடந்துகொள்ள வேண்டும். புதிய கண்ணோட்டம் அவர்களுக்குவேண்டும். பழைய இறுக்கமான பிடியைத் தளர்த்தவேண்டும். தாராள மனப்பான்மையுடன் சிந்தித்துச் செயல் ஆற்றவேண்டும்" என்ற கருத்துக்களைக் கலாநிதி சிவத்தம்பி, கலாநிதி கைலாசபதி, கலாநிதி சுசீந்திரராசா ஆகியோர் வலியுறுத்தினர்.

கிராமியச் சொற்கள் என வழக்கு மொழியை ஒதுக்கலாமா? பேச்சுக்கு மாறான அடினப் புணர்ச்சி விதிகளை வற்புறுத்தலாமா? இன்றுள்ள தமிழ் மலர்கள் மாணவர்களுடைய தரத்துக்கு எந்த அளவுக்கு ஏற்றன என்பது போன்ற விடயங்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டன. பிரதமக் கல்வி அதிகாரி திரு க. சிவநாதன் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தார்.

## 2 குழந்தைகள் மட்டுமே உயிருடன்

சிட்னி, ஜூன் 15

அவுஸ்திரேலியாவில் ஒரு தாய்க்கு ஒரே சூலில் பிறந்த 9 பிள்ளைகளில் இரண்டு பிள்ளைகள் மட்டுமே உயிருடன் இருக்கின்றன.

உயிருடன் ஒரு ஆண் குழந்தையும் ஒருபெண் குழந்தையும் இருக்கின்றனர். ஆண் குழந்தையின் நிறை 12 அவுன்ஸ் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்விருகுழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு டாக்டர்கள் அயராது உழைத்து வருவதாகக்கூறப்பட்டது.

## மேற்கு வங்காளத்தில் அகதிகள் பிரச்னை

புதுடில்லி, புதன்

மேற்கு வங்காளத்தில் 5 லட்சத்துக்கு மேற்பட்ட கிழக்குவங்க அகதிகளை வைத்திருக்க முடியாது என்று மேற்கு வங்க துணை முதல் மந்திரி மத்திய அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

5 லட்சத்துக்கு மேற்பட்டுள்ள அகதிகளை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரியுள்ளார். அகதிகளை கூடுதலாக வைத்திருப்பதினால் சட்டத்தையும் ஒழுங்கையும் தோற்றுவிக்க முடியாமலிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## படுக்கைக்குச் சென்றவர் 5 நாட்களின் பின் மரணம்

### கொலை எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

இரவு படுக்கைக்குச் சென்று மறுநாள் காலை மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த காவலாளி ஒருவர் 5 தினங்களின் பின்னர் மரணமானார். ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு நீர்ப்பாசன இலாகாவில் காவலாளியாகக் கடமையாற்றிய கரோலிஸ் அப்புகாமி (வயது 33) என்பவரது மரணம் ஒரு கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இம்மாதம் 12ந் திகதி மரணமான அப்புகாமியின் மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார். அப்புகாமி வசித்து வந்த அரசாங்க விடுதியைச் சேர்ந்த வேலப்பன் சங்கரன் என்பவர் சாட்சியமளிக்கையில் தாமும் மரணமானவரும், ஜேமிஸ் சிங்கோ என்பவரும் இம்மாதம் 6-ந் திகதி இரவு ஒன்றாகச் சேர்ந்து மது அருந்தியதாகவும் அப்போது தங்களுக்குள் சிறு சச்சரவு ஏற்பட்டதாகவும் அன்றிரவு படுக்கைக்குச் சென்ற அப்புகாமி மறுநாள் காலை எழும்ப முடியாமல் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

இதே இலாகாவில் கடமையாற்றும் பியதாசா என்பவர் அளித்த சாட்சியத்தில் ஜேமிஸ்சிங்கோ என்பவர் பொல்லொன்றை அப்புகாமி மீது

(6-ம் பக்கம் பார்க்க)

## கிராமிய கூத்துக்களை ஊக்குவிக்க நடவடிக்கை!

### 500 பட்டதாரிகள் நியமனம்

கோட்டை, செவ்வாய்

கிராமிய நடனக் கூத்துக்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னோடியாக 500 பட்டதாரிகளைக் கலாச்சார விருத்தி உத்தியோகத்தர்களாக அரசாங்கம் நியமித்துள்ளது.

கிராமிய நடனங்கள் போன்ற கலை, கலாச்சார, சமூக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பணியில் இவர்கள் ஈடுபடுவர். நாடு பூராவும் நியமிக்கப்பட்டுள்ள கலாச்சார விருத்தி உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை இன்றிலிருந்து ஆரம்பிப்பர்.

ஆங்காங்கே உள்ள சமூக கலாச்சாரநிலையங்கள், கிராம அபிவிருத்தி நிலையங்கள் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இவர்கள் செயற்படுவர் என்று அரசாங்கம் அறிவித்தது

## வரி விளம்பரம்

### தேவை

எல்லா வேலையும் செய்யக் கூடிய அச்சக அனுபவமுள்ளவர் தேவை. பிறேமா தொழிற்சாலை, வி. எம். றோட், பருத்தித்துறை. 2497

### விற்பனைக்கு

5 ஸ்ரீ 9546 இலக்க B. S. A. (1.75 c. c.) மோட்டார் சைக்கிள், 1800 மைல் ஓடியது நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 162 A, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 3187

நல்ல நிலையிலுள்ள 25 ஸ்ரீ உழவு இயந்திரம் பெட்டி, கிலர், டிஸ்கலப்பை முதலியவற்றுடன் விற்பனைக்குண்டு. இல: 69, ஸ்கந்தபுரம், 2496

டாக்டரின் சொந்தப் பாவனையிலுள்ள, முற்றிலும் பூரணமாக திருத்தியமைக்கப்பெற்ற, ஹம்பர் ஹாக் மார்க் ஆறு மோட்டார்கார், ரேடியோ, மின்சார மணிக்கூடு முதலியவற்றுடன் விற்பனைக்குண்டு. முன்னேற்பாடின்படி தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3188, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3188

## கேள்வி விளம்பரம்

மேல்பற்று வடக்கு கிராம சபைத் தலைவரால் 27-6-71-ந் திகதி காலை 10-30 மணிவரை 'ஒதியமலை பாவக்காய்க்குளம் தனிக்கல்லு றோட்டு'வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 75/- கேள்விப் பிணையாகவும் ரூபா 10/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களிலேயே கேள்விகள் கேட்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் 25-6-71-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் வழங்கப்படும். மேலதிக விபரங்கள் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்

சி. உ. சிவராசா, ஜே. பி.
தலைவர்
கி. ச. மேல்பற்று வடக்கு
ஒட்டுசுட்டான்
கிராம சபை அலுவலகம்
மேல்பற்று வடக்கு,
ஒட்டுசுட்டான்,
11-6-71 2849


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2-30, 5-30
சிவாஜி - ஜமுனா
நடித்த
நிச்சய தாம்பூலம்


## கேள்வி விளம்பரம்

### நொச்சிக்காட்டு வீதி திருத்த வேலை

மேற்குறித்த வேலைக்கான சீல் வைக்கப்பட்ட கேள்விகள் அராலிக் கிராமசபைத் தலைவரால் 29-6-71-ந் தேதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9-00 மணிவரையும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விப்பத்திரங்கள் 27-6-71-ந் தேதி நண்பகல் 12-00 மணிவரையும், ரூபா 25/- ரெண்டர் பணமாகவும், ரூபா 15/- ரெண்டர் பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் அனைத்தும் எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்

இ. நாகலிங்கம்
தலைவர்
அராலிக் கிராமசபை
கிராமசபை அலுவலகம்
அராலி, வட்டுக்கோட்டை
11-6-71 2848

## பாதுகாப்புப் படை நிதித் தொகை

கோட்டை செவ்வாய்
பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்டோருக்கென அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட நிதிக்கு நேற்று நண்பகல் 12 மணி வரை பன்னிரண்டு லட்சத்து 48 ஆயிரத்து 340 ரூபா சேர்ந்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள ஏழு ஸ்ரீலங்கா பிரஜைகள் 737 ரூபா 80 சதத்தை நன்கொடையாக அனுப்பி வைத்துள்ளனர். சிங்கப்பூரில் உள்ள ஓர் இலங்கையர் 644 ரூபா 02 சதத்தை நன்கொடைசெய்துள்ளார்.

மொனறாகலைக் கச்சேரி ஊழியர்கள் 2000 ரூபாவையும், எண்ணெய்க் கூட்டுத்தாபன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை அங்கத்தவர்கள் 2000 ரூபாவையும் இந்த நிதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.


நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப. 5-45
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி
(புதிய கொப்பி)

Daily at 4 p. m.
Poya at 10-30 a. m.
SOME GIRLS DO
(Color)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ரஜன் - நிர்மலா
நடித்த
சக்கரம்

இன்றுமட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
எம். ஜி. ஆர்—பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்

றீகல்— யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
முத்துராமன்-கே ஆர் விஜயா
நாகேஷ்
நடித்த
நாணல்
Daily 6-30 p. m
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)


## யாழ்ப்பாண மாநகர சபை சோலைவரி நிலுவை பற்றிய அறிவித்தல்

ஆண்டு தோறும் சோலை வரி நிலுவைப்பணம் காலா காலத்தில் வரியிறுப்பாளரால் ஒழுங்காகச் செலுத்தப்படாமையால், மோசமான நிலைக்கு சோலை வரி நிலுவைப்பணம் உயர்ந்துள்ளதை மிகுந்த வருத்தத்துடன் அறியத்தருகின்றேன். இவ்விடயமாக மேற்கண்ட அறிவுறுத்தலின் பிரகாரம் உங்களுடைய நிலுவைப்பணம் பூராவையும் செலுத்துவதன் மூலம் மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 252ம் பிரிவின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட பற்றாணை(வீருந்துக்கட்டளை) யின் அதிகாரப்படி குடியிருப்பாளரது அல்லது நிலச்சுவாந்தாரது அசையவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் பறிமுதல்செய்யப்படுவதிலிருந்து தவிர்த்து எம்முடன் ஒத்துழைக்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1968-ம் ஆண்டு முடியவுள்ள காலத்திற்குரிய நிலுவைப்பணம் பூராவும் 5-7-71-ந் திகதிக்கு முன்பதாக காரியாலயத்திலோ அன்றேல் நடுக்கட்டல் உத்தியோகஸ்தரிடமோ செலுத்திவிடுமாறு மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். வாடகைக் குடியிருப்பாளர்கள், தங்கள் ஆதனத்தின் வரிப்பணத்தைச் செலுத்தி மிகுதி வாடகைப் பணத்தை மனைச் சொந்தக்காரரிடம் கொடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5-7-71-ந் திகதிக்கு முன்பதாக நிலுவைப்பணம் செலுத்தப்படாத ஆதனங்கள் நடுக்கட்டல் செய்யப்பட இருக்கிறதென்பதையும், இவ்விடயமாக மறு அறிவித்தல் இருக்காதென்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்

ஏ. வி. சுந்தரம்
ஆணையாளர்
யாழ்ப்பாண மாநகரசபை
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13-6 71 2847

## தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்
புளியங்கூடலைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

மரணவிசாரணை அதிகாரி திரு ச மாலிங்கம் விசாரணை நடத்தினர். நஞ்சுத்திராவகம் அருந்தியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்
சரடிப்போக்குச் சந்தியில் உபதபால் நிலையமொன்றை நிறுவித்தருமாறு கிளிநொச்சி பட்டின சபைத்தலைவர் திரு எஸ் முருகேசு, தபால் அமைச்சர் திரு செ குமாரசூரியரிடம் கேட்டிருக்கிறார்.

## அறிவித்தல்

### சாவகச்சேரி டிஸ்றிக் கோட்டில்

1. பூநகரி சங்குப்பிட்டி வீதி வயிரவி செல்வராசாவும்
2. ஷெ. முத்தையா மகன் மூக்கையும்

வழக்காளிகள்

இல 3934/P
எதிராக

1. கிளிநொச்சி 10-ம் ஏக்கர் திட்டம் கமடு கதிரவேலு கைம்பெண் இலட்சுமியும்
2. கிளிநொச்சி 3-ம் வாய்க்கால் தேசையா சமம் தேசையா கைம்பெண் சந்நமும்

எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்றிக் கோட்டில் வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் பச்சிலைப்பள்ளி கரைச்சிப்பற்று முரசுமோட்டை இறை முரசுமோட்டைக்காடு ஏக்கர் 9 றூட் 2 பேர்ச்சு 4 எல்லை கிழக்கும் தெற்கும் எல்லா ஆறு வடக்கு TPT 4148 மேற்கு வாய்க்காலுக்கு விடப்பட்ட நிலம். இவ்வாதனத்தை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கச் சட்டத்தின் கீழ்ப்பிரிவிடல் செய்யவோ அல்லது விற்கவோ 3934-ம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருக்கிறது

எதிராளிகள் 1971-ம் ஆண்டு ஆனி மீ 20-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு இக்கோட்டில் வெளிப்படும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது

கோட்டுக்கட்டளைப்படி

மு. முத்துக்குமாரசுவாமி
காரியதரிசி

13-6-71
தயாரிக்கப்பட்டது
க. கதிர்காமசேகரர் (ஒப்பம்)
வழக்காளியின் வழக்கறிஞர்
2846

## கார் அன்பளிப்புக் குழு தெரிவு

குருநகர் செவ்வாய்
யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைத் தலைவரும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வருமான அல்பிரட் துரையப்பாவிற்கு யாழ்ப்பாண மக்களின் சார்பில் மோட்டார் கார் ஒன்றை அன்பளிப்புச் செய்வதற்கான கார் அன்பளிப்புக் குழுவொன்று புரக்டர் வி நடராசா ஜே. பி. யூ. எம் தலைமையில் இயங்கி வருகின்றது.

## விபத்து

ஊரதீவு. செவ்
வேலணை-அராலிச் சந்தியில் கார்ஒன்றும்ஒரு டிராக்டரும் மோதிக்கொண்டன. யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த காரின் முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது. ஊர்காவற்றுறை நோக்கிப்போய்க் கொண்டிருந்த உழவுயந்திரத்தின் பெட்டிச்சில்லு பல யார் தூரத்துக்கப்பால் வீசப்பட்டுக் கிடந்தது தெய்வாதீனமாக உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப, 2-00 5-00
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
முத்துராமன் - லக்ஷ்மி, நாகேஷ் — ராஜஸ்ரீ
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30 நடித்த
நவக்கிரகம்

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப, 2-00 மாலை 5-30
ஜெய்சங்கர், பாரதி,
சுந்தரராஜன், நம்பியார், நாகேஷ்
நடித்த
நில்! கவனி!! காதலி!!!

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, 5-30 மணி
☆ சிவாஜிகணேசன்
☆ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

லிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

ஹைலன்
காலை 10, பி.ப 2-00 மணி
உயர்ந்த மனிதன்

வித்துவான் F. X. C. நடராசா அவர்கள் எழுதிய
காரைநகர் மான்மியம்
காரைநகர் பற்றியும்
காரைநகரில் வாழ்ந்த பெரியார்கள் பற்றியும்
முழுத் தகவல்கள் அடங்கிய முதல் நூல்
விலை ரூபா: 5-00 தபாற் செலவு சதம்: 50
கிடைக்குமிடம்:
ஆ. நடராசா, 98, விவேகானந்தர் மேடு, கொழும்பு—13.
ஜெயபாகன் அன் கோ., 225, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
2622

# ஐ. நா. புனர்வாழ்வுத் திட்டம்: பாகிஸ்தான் முழு ஆதரவு

## இந்திய எல்லையிலுள்ள அகதிகள் மத்தியபிரதேசத்துக்குப் போகின்றனர்

புதுடில்லி, ஜூன் 15

கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளின் மறுவாழ்வுக்கென ஐ. நா. எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவும் அளிப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் எல்லைப்புறங்களிலிருந்து மத்திய பிரதேசத்திலுள்ள "மானு" முகாமுக்கு அகதிகளை ரயில் மார்க்கமாகவும் விமான மார்க்கமாகவும் அப்புறப்படுத்தும் பெரும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

அகதிகள் விஷயத்தில் உலக சமுதாயம் ஏதாவது செய்யாது போனால் இந்தியா தனது பாதுகாப்புக்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்று இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் கருத்து தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவுக்குள் வந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் திரும்பிவரும் போது அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான கமிஷன் ஒன்றை டாக்காவில் அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷனர் இளவரசர் ஆகாகான் தீர்மானித்திருக்கிருர். இந்த முயற்சிக்கு முழு ஆதரவும் அளிப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள அரசாங்க உதவி முகாம்களைப் பார்வையிடவும் ஐ. நா. குழுவுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் அனுமதிவழங்க இணங்கியிருக்கின்றது.

அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷன் கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் சம்பந்தமாக பாகிஸ்தான் தலைவர்களுடன் ராவல்பிண்டியில் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின்னர் இப்பொழுது புதுடில்லிக்குவந்திருக்கிருர். இன்று அகதிகள் முகாம்களைப் பார்வையிடுவதற்காக இளவரசர் ஆகாகான் கல்கத்தாவுக்குப் போகிருர்.

### கனடாவில் சுவர்ண்சிங்

கனடாத்தலைவர்களுடன் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைகுறித்து பேச்சுநடத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சுவர்ணசிங் ஒட்டாவாவுக்கு வந்திருக்கிருர். கிழக்குப் பாகிஸ்தான் நிலைமைகுறித்து உலக சமுதாயம் ஏதாவது செய்தாகவேண்டும். இல்லையென்ருல் பாரதம் தனது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவேற்படும் என்று திரு. சுவர்ண்சிங் பத்திரிகை நிருபர்களிடம் கூறினுர். இந்தியாவுக்கு வந்து சேரும் அகதிகளின் எண்ணிக்கை அளவுகடந்துபோவதை இந்தியா அனுமதிக்க முடியாது இதை உலகநாடுகள் உணரவேண்டும் எனவும் சொன்னுர். அகதிகள் பெருமளவில் வருவது குறையும் விதத்தில் அங்கு நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என்ருர் திரு. சுவர்ண்சிங்.

பாரதத்துக்கும் மற்ற கிழக்காசியநாடுகளுக்கும் பாதுகாப்பு ஏற்படவேண்டுமானுல் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைக்கு உடனடியாக அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்று இந்திய கல்விமந்திரி திரு சித்தார்த்த சங்கர்ராய் கோலாலம்பூரில் கூறினுர். மலேஷியத்தலைவர்களுடன் ஆலோசனைகலப்பதற்காக திரு ராய் அங்கு சென்றிருக்கிருர்.

### பாப்பரசுக்கு தகவல்

இந்தியாவுக்குள் வந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளின் நிலைமைபற்றி பாப்பரசர் போலுக்கு விளக்கம் கொடுப்பதற்காக கல்கத்தா ஆர்ச் பிஷப் பிரதிநிதி ஒருவரை அனுப்புகிருர். கல்கத்தா ஆர்ச் பிஷப் தமது சொந்தப் பிரதிநிதியை வத்திக்கானுக்கு அனுப்புகிருர். இவர் ரோமுக்கும் பெல்ஜியம் போன்ற இடங்களுக்கும் விஜயம்செய்வார் என்று தெரிகின்றது.

### உலக சமாதான சபை கோரிக்கை

பாகிஸ்தானுக்கு பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகள் வழங்கிவரும் உதவிகளை நிறுத்திவிட வேண்டும்என்று உலக சமாதான சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது. ஹெல்சிங்கியில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கிழக்குப்பாகிஸ்தான் நெருக்கடிக்கு விரைவில் அரசியல் தீர்வொன்று எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அகதிகளுக்கு உதவி

இந்தியாவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு உதவுவதற்காக பூட்டான் அரச குடும்பத்தினர் வீடு வீடாகச் சென்று நன்கொடைகள் வசூலிக்கிருர்கள். பூட்டானில் ஒருமாதகாலத்துக்கு நன்கொடை வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் 10 ஆம்புலன்ஸ் வண்டிகளை விமானத்தில் அனுப்பிவைக்கின்றது. ஆஸ்திரேலியாவிலிருந்து தனி விமானம் ஒன்றில் உதவிகள் அனுப்பப்பட்டுள்ளன. சிட்னியிலுள்ள தனிப்பட்ட வர்த்தகர் ஒருவர் இந்த விமானத்தைக் கொடுத்துதவியிருக்கிருர்.

இந்தியாவில் எல்லைப்புற நகரங்களிலிருந்து மத்திய பிரதேசத்தில் உள்ள மானு முகாமுக்கு அகதிகள் பெருந்தொகையில் அனுப்பிவைக்கப்படுகின்றனர். இந்த அகதிகளை அனுப்புவதற்கு உதவும்வகையில் இரண்டு சோவியத் விமானங்கள் டம்டம் விமானத்துறையில் வந்திறங்கியுள்ளன.

## மலையாள நடிகர் சத்தியன் காலமானுர்

சென்னை, ஜூன். 15

மலையாளத்தில் மிகப் பிரபல்யமான குணசித்திர நடிகர் சத்தியன் சென்னையில் காலமானுர்.

அவருக்கு வயது 59. இரத்தத்தில் புற்றுநோய் ஏற்பட்டதால் அவர் மரணமானுர். திரு சத்யன் கடந்த 20 ஆண்டுகளில் 150 படங்களுக்கு மேல் நடித்திருக்கிருர், சிறந்த நடிப்புக்காக. 4 தேசிய விருதுகளையும் ஒரு ராஜ்ய விருதையும் அவர் பெற்றிருக்கிருர்.

இவர் நடித்த செம்மீன் என்ற மலையாளப் படம் பெரும் வெற்றியளித்தது. கடல்பாலம், வாழ்வே மாயம் அடிமைமகளே போன்ற பிரபல்யமான படங்களில் அவர் நடித்திருக்கிருர்

### பொங்கல்

மாவிட்டபுரம், செவ் நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் கடம்ப மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள நாகதம்பிரானுக்கு இம் மாதம் 7-ம் திகதி பொங்கல் விழா நடைபெறும்.

......

### 'ஆசிரியர்களின் உரிமையும் கடமையும்'

பருத்தித்துறை, செவ்: 'பாடக்குறிப்பு என்பது ஒரு வெறும் கண்துடைப்பு வேலையல்ல, ஆசிரிய சேவையின் அச்சாணியாக அது கருதப்படல் வேண்டும். ஓர் ஆசிரியன் தனது வேலையை போதியளவு ஆயத்தஞ் செய்து, கடமையைச் சரிவரச் செய்ய பாடக்குறிப்பு உதவுகிறது' என்று நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மேற்படி கல்லூரி அதிபர் திரு க. சிவசிதம்பரம் நேற்று மாலை கூறினுர்.

"ஆசிரியர் தமது உரிமைகளைக் கோரி, நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்து வாதாட அவர்களுக்குள்ள உரிமை போல தமது கடமைகளைத் திருப்திகரமாக, மனச்சாட்சிக்கு மாறில்லாது செய்ய வேண்டிய கடமையும் உள்ளது. கடமையில்லாமல் உரிமை யில்லை. இரண்டும் எமது கண்களாக விளங்க வேண்டும்" என்றும் அவர் கூறினுர்.

### வெள்ளோட்டம்

மாவிட்டபுரம், செவ்வாய் ஏழாலை அம்பலவாணேஸ்வரர் ஆலய புதிய சித்திரத் தேர் அண்மையில் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டது.

70 ஆயிரம் ரூபா செலவில் சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்த இத் தேரின் வெள்ளோட்ட விழாவில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இப்புதிய தேரை ஏழாலையைச் சேர்ந்த இ. பொன்னுச்சாமி நீர்வேலியைச் சேர்ந்த இ. செல்வரத்தினம் பொன்னுச்சாமியின் புத்திரர்களான தங்கவேலாயுதம் இராசதுரை ஆகியோர் அமைத்தனர்.

### முதல்வாரத்தில் பாடசாலை வரவில் திருப்தி

கோட்டை. செவ்வாய் பாடசாலைகள் ஆரம்பமாகிய முதல்வாரத்தில் உற்சாகம் அளிக்கும் வகையில் மாணவர், ஆசிரியர் வரவு இருந்ததாக கல்வி அமைச்சர் கூறியிருக்கிருர்.

கொழும்பில் 90 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம்வரை மாணவர் வரவு இருந்தது என்றும் குருநாகலையில் 90 சத வீத மாணவரும் 98 சத வீத ஆசிரியர்களும் முதல்வாரத்தில் சமுகமளித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

### கோரிக்கை

அரியாலை, செவ்வாய் யாழ். மாவட்டத்திலுள்ள அடைவுபிடிப்போர் பிணைப் பணம் கட்டாமல் தொழில் செய்ய வசதி செய்துதரவும் என யாழ். அரசாங்க அதிபரை அடைவுபிடிப்போர் சங்கத்தினர் கோரியுள்ளனர் இதுசம்பந்தமாக திரு. ஏ பி இராஜேசயா தலைமையில் அரசாங்க அதிபரைப் பேட்டிகண்டனர்.

## இரகசிய தஸ்தாவேஜு பத்திரிகையில் பிரசுரம்! அமெரிக்காவில் பெரும்பரபரப்பு

நியூயோர்க், ஜூன். 15

அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் சம்பந்தமான மிக இரகசியமான தஸ்தாவேஜு ஒன்றின் விபரங்களை 'நியூயோர்க் டைம்ஸ்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதனுல் அமெரிக்க அரசாங்கத்துக்கு பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளதுடன் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

வியட்னும் ராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்க அரசாங்கத்தினர் பங்கு பற்றிய இரகசியத் தஸ்தாவேஜுகள் இவை. இந்த தஸ்தாவேஜுகளின் ஒரு பகுதியை அப் பத்திரிகைவெளியிட்டிருக்கின்றது. மேலும் சில பகுதிகள் வெளியாகும் என்று அப் பத்திரிகை அறிவிக்கின்றது.

இத் தஸ்தாவேஜுகளைப் பகிரங்கப் படுத்தியதின் மூலம் அமெரிக்க பாதுகாப்புச் சட்டம் மீறப்பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு மெல்வின் லெயார்ட் கூறியிருக்கிருர்.

இந்த விஷயம்பற்றி சட்ட நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அமெரிக்க நீதி இலாகா கேட்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் சபையிலும் இந்தச் செய்தி பற்றிய பிரச்னை எழுந்துள்ளது. இத் தஸ்தாவேஜிலுள்ள விஷயங்கள் காங்கிரஸ் சபைக்கு அறிவிக்கப்படவில்லையென்று பல அங்கத்தவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிருர்கள்.

மேற்படி தஸ்தாவேஜு சம்பந்தமான செய்தியை அதிபர் நிக்ஸன் பார்க்கவில்லையென்றும் ஆனுல் அவ்வறிக்கை எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பற்றி அவருக்குத் தெரியும் என்றும் வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் கூறினுர்.



யாழ். மாவட்ட சமாதானநீதவானாக நியமனம் பெற்ற திரு. இ.க. தம்பையாவைப் பாராட்டி நடைபெற்ற மதியபோசன விருந்தில் திரு. தம்பையா நன்றிதெரிவித்துப் பேசுகிறார்.

## மீனவர் கஷ்டம்: மந்திரிக்கு மகஜர்

மாவிட்டபுரம், செவ்

மீன்பிடி இயந்திரங்களை திருத்தும் தொழிற்சாலை ஒன்றை காங்கேசன்துறையில் அமைத்துத் தரும்படி கடற்தொழில் அமைச்சரை காங்கேசன்துறை கடற்தொழில் அபிவிருத்திச் சபை கோரியுள்ளது.

மேற்படி அபிவிருத்திச் சபைச் செயலாளர் எஸ். ஸ்ரானிஸ்லாஸ் கடற்தொழில் அமைச்சருக்கு விடுத்த இக் கோரிக்கையில் மீனவர் படும் கஷ்டத்தை எடுத்துக்காட்டி மேலும் தெரிவித்திருப்பதாவது:

''இங்குள்ள மீனவர்களின் பெரும்பாலானவர்கள் இயந்திரங்களைப் பாவித்து மீன்பிடிக்கச் செல்கின்றனர். சிலசமயங்களில் இயந்திரம் பழுதானால் அன்று தொழில் பாதிக்கப்பட்டுவிடும். இயந்திரத்தை யாழ்ப்பாணம் கொண்டுசென்று திருத்த வேண்டும் அல்லது அங்கிருந்து நிபுணரை அழைத்து வந்து திருத்தவேண்டும். இதனால் பணச்செலவும், வீண்நேரமும் செல்கிறது. ஆதலால் இப்பகுதியில் உள்ள மீனவர்பயனடையத் தக்கதாக காங்கேசன்துறையில் இயந்திரங்களை திருத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவேண்டும்.''

## அமைச்சர் குமாரசூரியருக்கு பாராட்டு

தாவடி, செவ்வாய்

'அரசாங்க இலாகாக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இலவச, தபால் தந்தி தொலைபேசித் தொடர்புகள் சேவையை நீக்குவதன்மூலம் தபால் இலாகா கோடிக்கணக்கான ரூபாவை வருமானமாகப்பெறமுடியும் இது விடயமாக தபால்தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை நாம் பாராட்டுகின்றோம். சகல அரசாங்க இலாகாக்களிலும் பார்க்கச் சிறந்த சேவையை யாற்றும் இலாகா தபால் இலாகா எனின் அது மிகையாகாது'

அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்க யாழ். கிளையின் உபதலைவர் திரு. எஸ். எஸ். குலநாயகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'அரசினரால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப்பத்திரங்களைப் பெறுவதற்காக தபாலுறையை மாத்திரம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் இருந்துவருகிறது. இம்முறையைமாற்றி, உறையுடன் தபால் தலையையும் அனுப்பிப்பெறும் முறையை ஏற்படுத்தினால் தபால் இலாகாவுக்கு இதன் பிரகாரமும் ஆண்டுதோறும் வருமானம் கிடைக்கும். இப்படியான பல வருமானங்கள் தபால் இலாகாவுக்கு கிடைப்பதற்கு ஏதுவாகும்'

என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதில் பதிவுகாரர்

கோட்டை, செவ்

திரு. லோறி விக்கிரமசிங்க உயர்நீதிமன்ற பதில் பதிவுகாரராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர் இந் நீதிமன்றத்தின் உதவி பதிவுகாரராகக் கடமையாற்றினார். உயர்நீதிமன்ற பதிவுகாரராகக் கடமையாற்றிய திரு. என். நவரத்தினம் ஓய்வுபெற்றதையடுத்தே திரு. லோறி விக்கிரமசிங்க அப்பதவிக்கு நியமனம்பெற்றுள்ளார்.

## 'ஆசிரியரின் பொறுப்பு அதிகரித்துள்ளது'

பருத்தித்துறை, செவ்.

முன்னெப்பொழுதுமில்லாதவாறு உலகெங்குமுள்ள இளைஞர் மத்தியில் அமைதியின்மையும் ஒழுங்கீனமும் நிலவும் இன்றைய நிலையில் ஆசிரியரின் பொறுப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளது. இளைஞரைச் சரியானபாதையில் இட்டுச் செல்ல வேண்டிய கடமையில் பெரும் பங்கு ஆசிரியருக்கு உரியதாகும் என்று விவசாயக் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வுடன் வவுனியா மாவட்டத்திற்கு இடம் மாறிச் செல்லும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. பொ கணேசமூர்த்திக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமைதாங்கிய மேற்படி கல்லூரி ஆசிரியர் பேரவைத்தலைவர் திரு எஸ் சின்னத்தம்பி கூறினார்.

திரு எம் வேலுப்பிள்ளை செயலாளர் திரு சபா ஜெயராசா ஆகியோரும் பேசினர்.

## கடலில் வீழ்ந்த படகுக் கண்டக்டர் ஆஸ்பத்திரியில்

குருநகர். செவ்வாய்

ஊர்காவற்றுறை-அனலைதீவு போக்குவரத்துச்சேவையில் ஈடுபட்டிருந்த மோட்டார்ப் படகிலிருந்து தவறிக் கடலுள் விழுந்த மேற்படி படகின் கண்டக்டர் ஒருவர் காலில் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியநாதர் சந்தையா என்ற கண்டக்டர் கடலில் தவறிவிழுந்தபோது அதிலிருந்த பிரயாணிகள் சிலர் அவரைக் கடலில்விழாமல் பாதுகாத்ததாகவும். தலைமட்டும் கடலில் மூழ்கிய நிலையில் ஒருகாலைப் பலமாகப் பிடித்துக் கொண்டதன் மூலம் கண்டக்டரைப் பாதுகாத்ததாகவும் தெரிகிறது. வலதுகாலில் பலத்த முறிவு ஏற்பட்டுள்ள நிலையில் இவர் சிகிச்சைபெற்று வருகிறார்.

## மல்லி கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் நிலவிவரும் மல்லித் தட்டுப்பாடு இவ்வாரம் முதல் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு நிலவும் கஷ்டங்கள் பற்றி யாழ். நகர மேயரும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவருமான திரு. அல்பிரட் துரையப்பா சி. டபிள்யூ. ஈ. தலைவர் திரு. ஒ பயசேகராவைச் சந்தித்து எடுத்து விளக்கியபோது, இவ்வாரத்திலிருந்து. தொடர்ச்சியாக கப்பலுக்கு மல்லியை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

யாழ். ப. நோ. கூ. சங்கங்களின் புதிய தலைவராக அண்மையில் பதவியேற்ற திரு. துரையப்பா, நேற்று முன்தினம் சி. டபிள்யூ. தலைவரைச் சந்தித்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். மல்லி சகல பநோ கூ சங்கங்கள் மூலம்விநியோகிக்கப்படும்.

## உரும்பராய் வெற்றி

உடும்பராய், செவ்

உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும்திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய்க் கோஷ்டி 4 — 3 கோல்களால் வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு ச. இரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கட்டுவன் வெற்றி

மாவிட்டபுரம், செவ்

கட்டுவன் விளையாட்டுக் கழகத்துக்கும் கோண்டாவில் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் கட்டுவன் வென்றது.

தெல்லிப்பழை அம்பனை ஒருவன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கதிர்காமநாதன் ஞாபகார்த்த 1-வது நொக்கவுட் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒரு அங்கமாக இடம்பெற்ற போட்டியொன்றில் மேற்படி இரு கோஷ்டிகளும் மோதிக் கொண்டன.

## 7000 ஏக்கரில் கால்நடைப் பண்ணைகள்

கோட்டை செவ்வாய்

7000 ஏக்கர் றப்பர் தோட்டத்தில் கால்நடைப் பண்ணைகளைப் பரீட்சார்த்தமாக அமைக்க தோட்டத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது. இப்பண்ணைகளில் பரீட்சார்த்தமாக வளர்ப்பதற்கு டென்மார்க்கிலிருந்து 1000 பசுக்கன் வரவழைக்கப்படவுள்ளன. மேற்படி பண்ணைகளை அமைக்கவேண்டிய முறைகள் கால்நடை வளர்ப்பில் கையாளவேண்டிய நடைமுறைகள் ஆகியனபற்றி 7 பேர் கொண்ட குழுவொன்று ஆராய்ந்துசிபாரிசு செய்யும்.

## 350 பட்டதாரிகள்

கோட்டை, செவ்

குடிசன மதிப்பெடுக்கும் வேலைகளில் 350 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இதசம்பந்தமான பயிற்சி ஒன்று அளிக்கப்படும்.

## உதைபந்தாட்டத்தில் அரியாலைக்கழகம் வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், அரியாலை விளையாட்டுக் கழகத்துக்கும் தெல்லிப்பளை கிருஸ்கோப்பஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகம் ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது மைதானத்தை விட்டு வெளிநடப்புச் செய்தது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் அரியாலை சிறப்பாக விளையாடி இடைவேளைக்கு முன்பாக இரு கோல்களைப் போட்டது.

இடைவேளையின் பின் அரியாலைக் கோஷ்டியினர் சில கட்டங்களில் முறை தவறி விளையாடியதால் அடிக்கடி மத்தியஸ்தரின் தண்டனைகளுக்கு இலக்கானார்கள். இதனால் கிருஸ்கோப்பஸ் கோஷ்டிக்கு அடுத்தடுத்து மூன்று 'பெனல்டி' உதைகள் கிடைத்தன. இதில் இரண்டு 'பெனல்டி' உதைகளை கோலாக்கினார்கள்.

அரியாலைக் கழகத்துக்கு எதிராக மூன்றுவது 'பெனல்டி' உதையை மத்தியஸ்தர் கொடுத்த போது, மேற்படிக் கழகத்தின் வீரர் ஒருவருக்கும் மத்தியஸ்தருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதினால் மத்தியஸ்தர் அவ் வீரரை மைதானத்தை விட்டு வெளியேற்றினார். இதைத்தொடர்ந்து அரியாலைக் கோஷ்டி வீரர்கள் அனைவரும் மைதானத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். இவர்கள் வெளிநடப்புச் செய்து சிறிது நேரத்தின் பின் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்டம் முடிவடையும் போது இரு கோஷ்டிகளும் தலா 2 — 2 கோல்களைப் பெற்றிருந்தன.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ராஜேந்திரா மத்தியஸ்தம் வகித்தார். (தே நி)

## 'குடிதண்ணீர் வழங்கவும்'

வேலணை, செவ்

வாரதீவு, மடத்துவெளி ஆகிய இடங்களில் குடிதண்ணீர் இன்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர். இப்பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு திரு கா. பொ இரத்தினம் எம். பி அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள சில கிராமமுன்னேற்றச் சங்கங்கள் பல ஆண்டுகளாகப் பொதுக் கட்டடம் நடத்தாமலும் தொழிற்படாமலும் இருப்பது குறித்தும் எம். பி திரு கா பொ இரத்தினம் யாழ் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## வலி. மேற்கு விவசாயிகள் கஷ்டம்

சங்கானை, செவ்.

வலி. மேற்குப்பகுதியில் உள்ள விவசாயிகள் பயிர்களுக்கு உரம் பெறுவதில் பெரிய கஷ்டம் அனுபவிக்கின்றனர். இதுவரை இப்பகுதியில் வலி, மேற்கு ப. நோ. கூ. ச. சமாஜமே விவசாயிகளுக்கு உரத்தை கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் விநியோகித்துவந்தது. முன்னைய நிர்வாகம், உரக்கூட்டுத்தாபனத்துடனான கணக்குகளைச் சரிவரத்தீர்த்துக் கொள்ளாத காரணத்தால் உரக் கூட்டுத்தாபனம் சமாஜத்திற்கு மேற்கொண்டு உரம் வழங்குவதில்லை எனத்தீர்மானித்ததைத் தொடர்ந்து இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதனால் எதிர்வரும் காலபோகத்தில் நெல்விளைச்சல் பெருமளவு பாதிக்கப்படுமெனவும்,

விவசாயிகள் தாம்பெற்ற விவசாயக்கடனைத் திருப்பிக்கொடுப்பதில் கஷ்டங்கள் ஏற்படுமெனவும் கவலையடைந்துள்ளனர்.

## மேஜர் கொல்லப்பட்டார்

அனுராதபுரம், செவ்.

தலாவை பகுதியில் பயங்கரவாதிகளின் பிரதான தலைவர்களில் ஒருவனான மேஜர் என அழைக்கப்படும் குணரட்ண கொல்லப்பட்டார்

மேஜரும் அவரது சகாக்களும் இருந்த வீட்டைஇராணுவத்தினர் முற்றுகையிட்டுத் தாக்கிய பொழுதே மேஜர் கொல்லப்பட்டார்.

கட்டைவேலி

## ப நோ கூ ஆரம்ப சங்க நிர்வாகிகள்

பருத்தித்துறை, செவ்

கட்டைவேலி பலநோக்குக்கூட்டுறவு ஆரம்ப சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகஅமைச்சர் திரு. ரி பி இலங்கரத்திருவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்,

திருவாளர்கள்: கே எஸ் சிதம்பரநாதன். த சிதம்பரப்பிள்ளை, எஸ் செல்லையா என் கனகசபை. இவர்கள் அடுத்தமாத ஆரம்பத்தில் தமது கடமையையேற்கவிருக்கிறார்கள்.

## அ. இ. சைவக்குருமார் அர்ச்சகர்சபை தீர்மானம்

மாவிட்டபுரம், செவ்.

ஈழத்தில் அருகி வரும் கிரியை முறைகளை குருமாருக்கு கிரியை முறைகள் பற்றிய பயிற்சி வகுப்புகளை நடத்துவதென அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை தீர்மானித்துள்ளது.

மேற்படி சபையின் கூட்டம் ஒன்று கட்டுவன் தறட்டையிட்டி ஞானவயிரவர் ஆலயத்தில் நடைபெற்ற சமயம் சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது.

அங்கத்தவர்களுக்கு ஒரு பொது இடத்தில் வைத்து கிழமைக்கு இரு தினங்கள் சமயபாடம், சமஸ்கிருத வகுப்புகள், சைவக் கிரியை வகுப்புகள் ஆகியவற்றை தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதென்றும் தொடர்ந்து இருவருடம் சகல துறைகளிலும் பயிற்சி பெற்ற தகுதியுடைய மாணவர்களுக்கு ஆசாரிய அபிஷேகம் செய்து வைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. வேறுபல தீர்மானங்களும் நிறைவேறின.

விளையாட்டின் மூலம்

## "ஆரோக்கிய வாழ்வுக்கு அரசு உதவுகிறது"

சுழிபுரம், செவ்வாய்

"கிராமப்புறங்களில் மறைந்து இருக்கும் விளையாட்டு வீரர்களின் திறமையையும் ஆற்றலையும் நாடு அறியச் செய்யும் என்ற நோக்கோடு அரசாங்கம் பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகிறது. விளையாட்டு அமைச்சின் மேற்பார்வையில் இன்று கிராமங்கள் தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதையும் இதற்காகப் பல்லாயிரக்கணக்கான பணம் செலவுசெய்யப்படுவதையும் நாம் அறிவோம். போட்டியில் கிடைக்கும் வெற்றியையும் தோல்வியையும் சமமாகவே மதிக்கவேண்டும்"

இவ்வாறு வலிகாமம் மேற்கு இரண்டாம் பிரிவினர் நடாத்திய சரபந்தாட்டப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிமேற்குக் காரியாதிகாரி திரு மா நடராசா குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. எஸ் கேருணநிதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

"பல விளையாட்டு உபகரணங்களையும் இலவசமாக அரசு வழங்கி கிராம வாலிபர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உதவுவதுடன் விளையாட்டு அதிகாரிகள் மூலம் அறிவுரைகளையும் போதித்து வருகின்றது. விளையாட்டு வீரர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன் ஓர் ஒழுங்கான வாழ்வு வாழ விளையாட்டைக் கைக்கொள்ள வேண்டும்" என்றும் காரியாதிகாரி தெரிவித்தார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குக் கேடயங்களையும் சான்றிதழ்களையும் அவர் வழங்கினார். விளையாட்டுப் போதனாசிரியர் திரு இ சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப்பேசினார்.

பத்தேகம நால்வர் கொலை வழக்கு:

## முடிக்குரிய சாட்சி எதிர்தரப்பிற்கு மாறினர்!

காலி, செவ்.

பத்தேகம நால்வர் கொலை வழக்கில் முடிக்குரிய சாட்சியான பி. பிரம்பி என்பவர் எதிர்தரப்பு சாட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். முடிக்குரிய வழக்கறிஞர் சிப்லி அஸீஸ் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கிணங்க நீதியரசர் மேற்படி சாட்சியை எதிர்தரப்பு சாட்சியாக ஏற்றுக் கொண்டார்.

காலி அசைஸ் கோட்டில் கமிஷனர் திரு. டி. டபிள்யூ. எம். சிறிமானே முன்னிலையில் வழக்கு விசாரணை ஆரம்பமானது. இந்த வழக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரைக் கொலை செய்ததாக ஏழு இளைஞர் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

சாட்சியான பிராம்பி தான் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தெரிவித்தவை பொய்யானவை என்று சொன்னார். பொலிசாருக்கு பயந்தே தாம் அவ்விதம் சொன்னதாகத் தெரிவித்தார். கொழும்பைச் சேர்ந்த டாக்டர் என் சிரி பிலிப்டோ பாபா பின்னே சாட்சியமளிக்கையில் பின்வருமாறு சொன்னார்.

ஜூலை மாதம் 7-ம் திகதி 8-வது எதிரி இடதுகையில் காயத்துடன் எனது ஆஸ்பத்திரிக்கு வந்தார். தமது பெயர் பிரேமச்சந்திரா என்று தெரிவித்தார். நான் அவருக்குச் சிகிச்சை அளித்தேன். மீண்டும் 11-ம் திகதி அவர் வந்தார். அதே தினத்தில் பத்தேகம பொலிசாரால் இந்நபர் எனது டிஸ்பென்ஸரியிலுள்ள பங்களாவிற்குக் கொண்டு வரப்பட்டார். முதல்தடவை இவர் வந்தபோது நான் காயம் எப்படி உண்டானதென்று கேட்டேன். உளியினால் கையில் காயம் ஏற்பட்டதாகச் சொன்னார்.

என் டபிள்யூ பியதாஸ மற்றும் சிலரும் சாட்சியமளித்தனர். விசாரணை தொடர்கிறது.

## நீதிமன்ற கட்டிடம் தேவை

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடம், பழையதாகவும் வசதியற்றிருமிருப்பதால் அரசாங்கத்தால் அதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் நவீன நீதிமன்றமொன்று கட்டித் தரும்படி, நீதிஅமைச்சரை கிளிநொச்சிப்பட்டினசபை கோரியுள்ளது.

## குடிசனமதிப்பீடு பின்போடப்பட்டது

கோட்டை, செவ்வாய்

ஜூலைமாதம் 27-ம் திகதி மேற்கொள்ள இருந்த குடிசனமதிப்பீட்டை அரசாங்கம் காலவரையின்றி ஒத்திப்போட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற, உள்நாட்டு, பொதுநிர்வாக அமைச்சினுல் அனுப்பப்பட்ட சுற்று நிருபமொன்றில் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிட்டபடி ஜூலை 27-ம் திகதி அன்று அரைநாள் விடுதலைவழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நடவடிக்கை

அரியாலை, செவ்வாய்

எரிபொருள் தொட்டிகளைப் புகையிரதப் பாதைக்கு வசதியான இடத்தில் நிறுவுவதற்கு வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அண்மையில் எரிபொருள் விவசாயரசாயனப் பொருட்களின் விற்பனை முகவராக வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசம் நியமிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு திணைக்களம் றவிடும்

அரியாலை, செவ்வாய்

கூட்டுறவு நிதியினைக் கூட்டுறவுத் திணைக்களமே இனிமேல் அறவிடும். மாவட்ட சமாஜங்களே இப்போது இந்த நிதியினை அறவிட்டு வருகின்றன. கூட்டுறவு நிதி ஒழுங்காகச் செலுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பது, கூட்டுறவுப் பரிசோதகர்களின் பொறுப்பாகும்.

இவ்வாறு கூட்டுறவு ஆக்க ஆணையாளர் வெளியிட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ் சுற்று நிருபத்தில் இந்நிதியை அறவிடுவதில் விசேட கவனம் செலுத்தும் படி தமது உத்தியோகத்தர்களுக்குப் பணிக்கும்படி சகல கூட்டுறவு ஆணையாளரையும் கேட்கப்பட்டுள்ளது.

# அஷ்ட திக்கு

### தஞ்சாவூர் பெரியகோயில்

தஞ்சாவூர் பெரியகோயில் எனும் பிரகதீச்வரர் ஆலய விமானத்தின் மீதுள்ள தமிழ்க் கலசத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்செய்தியை 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தலைப்பில் திரு டி. எம். பாஸ்கரத்தொண்டமான் வெளியிட்ட நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் தஞ்சாவூரில் 1950-ம் வருடத்தில் டிபுடி கலெக்டராக (பதில் அரசாங்க அதிபர்) இருந்தவர். அக்கலசத்தில் 'வீரபத்திர ஆசாரி' என்பவரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதாயும் சோழமன்னர் அளித்த உலோகத் தடிமீதே பொருத்தப்பட்டதாகத் தெரிவதாகவும் அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜராஜ சோழன் எதைச்செய்தாலும் மிகப் பெரியதாகவே செய்து முடிப்பார். தஞ்சை ஆலயத்திலுள்ள நந்தி, விமானம், மூலஸ்தானம் எல்லாமே மிகப் பெரியவை. மூலஸ்தானத்துக்கு மேலே கட்டியுள்ள விமானம் 216 அடி உயரமுள்ளது. வாசலிலுள்ள ராஜகோபுரத்தை விட, மூலஸ்தானத்துக்கு மேலே எழுப்பியுள்ள விமானத்துக்கே இங்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திருபுவனம் இவ்விடங்களிலும் விமானங்களே அதிக உயரமாகக் கட்டப்பெற்றுள்ளன. தஞ்சாவூர் கலசத்தில் பொறித்துள்ள எழுத்துக்களை மட்டுமன்றி மேற்கூறிய கோயில் கலசங்களிலும் எழுத்துக்கள் உள்ளனவா என்பதை ஆராய்ச்சியாளர் கண்டுபிடிக்கவேண்டுமென்று ஒருவர் சென்னை 'இந்து' பத்திரிகையில் எழுதுகின்றார்.

தமது பெயரை ஒருவர் சுவாமியின் விமானத்தின் மீது விளம்பரப்படுத்தியிருப்பின் அது சரியாகுமா? அவ்வளவு பெரிய கோயில் கட்டிய ராஜராஜ சோழனுக்கு அக்கோயிலில் ஒரு ஞாபகச் சின்னமும் இல்லை. அவரது சிலையைச் செய்து அக்கோயிலில் வைக்க சமீபத்தில் ஒரு குழுவினர் முயற்சித்தனர். ஆனால் தலைமை அரசாங்க அதிகாரிகள் இதற்கு அனுமதி அளிக்கவில்லை. கோவிலுக்கு வெளியே அந்தச் சிலை ஸ்தாபிக்கப்பெற்று, இன்னும் மூடிக்கிடக்கிறது. கோவிலுக்குள் அதற்கு இடமளிக்கவேண்டுமென்று புதிய முயற்சிகள் நடக்கின்றன. மூடப்பட்ட அச்சிலையை ஏராளமான மக்கள் தரிசித்து வருகிறார்கள்.

0 0

சேரிகளிலே குடிசைகளில் வாழும் ஏழைகளுக்கு வீடு கட்டித்தர தமிழக அரசு 40 கோடி ரூபாவில் ஒரு திட்டம் தயாரித்துள்ளதாம். அடுத்த வருடத்துக்குள்ளாக தமிழகத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி குடிதண்ணீர் வசதிகள் அளிக்கப்படுமாம். இவையெல்லாம் நிறைவேற்றப்பட்டால் தமிழகம் ஒரு பூலோக சுவர்க்கமாகக்கூடும்.

0 0 0

தமிழகத்திலே 33-வது 'சுவீப்' டிக்கெட்டு விற்பனை மூலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் பணம் அனைத்தும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குச் சேருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் சீட்டை தமிழக புதிய கவர்னர் முதலமைச்சரிடம் வழங்கியபோது தமக்குப் பரிசு கிடைப்பின் அது அனைத்தையும் அந்நிதிக்கே அளிப்பதாக அறிவித்தார். யாருக்கு முதல் பரிசு கிடைப்பினும் அவர் தமக்குக் கிடைக்கும் தொகையில் பாதியையாவது இந்த நிதிக்கு அளிப்பரென்றே எதிர்பார்க்கலாம்.

ஈழத்திலே தொழு நோயாளருக்கெனவிடுதிகள் கட்டி அவர்களை அரசாங்கமே பராமரித்து வருகின்றது. அதுமட்டுமல்ல, இங்கு எல்லாருக்குமே வாரத்தில் ஒரு கொத்து அரிசியை இலவசமாகவும், மற்றொரு கொத்து அரிசியை குறைந்த விலைக்கும் அரசாங்கம் வழங்குவது பசி பட்டினிப் பிரச்சினையைப் பெரிதும் தீர்ப்பதாகும். ஈழத்தில் ஏழ்மை அதிகம் இருக்கிறதெனினும் பசிபட்டினி மிகவும் குறைவு.

ஆனால் இங்கு வயோதிபரில் பெரும்பாலோருக்குப் 'பென்ஷன்' முதலிய சமூக வசதிகள் இல்லாமையால் அவர்கள் வாழ்க்கை நடத்துவது பெரும்பிரச்சினையாகிறது. பிரிட்டன் முதலிய நாடுகளிலே வயோதிபருக்குப் பென்ஷன், பெரிய குடும்பத்தாருக்கு குழந்தைகள் உதவிப்பணம் முதலியன அளிக்கப்பெறுகின்றன. இங்கும் இதற்கான ஒழுங்குகளைக் கூடுமானவரை செய்தால் ஏழைகள் கஷ்டம் குறையும். இலங்கையிலும் 'ஸ்வீப்களை' நடத்துகிறோம். ஏழைகளின் கஷ்ட நிவாரணத்துக்கென திட்டங்கள் தீட்டி, அதற்காகவே ஸ்வீப்களை நடத்துவதாயின், அதிக பணம் வசூலாவதுடன், தேசியப் பிரச்சினைகளும் ஓரளவு தீரக்கூடியதாக இருக்கும்.

0 0 0

### பிச்சைக்காரருக்குப் புனர் வாழ்வு

தமிழக முதல்அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு 48-வது ஜயந்தி சென்ற வாரம் சென்னையில் நடைபெற்றது. பல கோயில்களிலிருந்தும் அவருக்குப் பிரசாதங்கள் கிடைத்தன. அவற்றை அவர் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஏராளமானவர்கள் அவரைக் கண்டு வாழ்த்தி மலர் மாலைகள் அணிவித்தனர். மாலை போட்ட ஒவ்வொருவரும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு பத்துரூபாய் அளிக்கவேண்டுமென்று முதலமைச்சர் கூறியதன் மீது, அந்த நிதிக்கு கணிசமான தொகை சேர்ந்தது.

மகாத்மாகாந்தி 'ஆட்டோகிரப்' புத்தகத்தில் கையெழுத்திடவேண்டுமாயின், அதற்கு அவர் 'தரித்திர நாராயண நிதிக்கு' ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கூறிவந்தார். பலர் இந்தக் கட்டணத்தை செலுத்தி அவரது கையெழுத்தைப் பெறுவர். தமிழக முதலமைச்சரின் புதிய ஏற்பாடு மகாத்மாவின் வழியை நினைவுபடுத்துவதுடன் ஏழைஎளிய மக்களுக்குக் கருணை ஏற்படும்படி தூண்டுவதாகவுமுள்ளது.

0 0 0

தமது 48-வது பிறந்த தினத்தன்று கருணாநிதி அவர்கள், 'பிச்சைக்காரர் மறுமலர்ச்சி நிதியை' ஆரம்பித்ததில் நான்கு லட்சம் ரூபாய்களுக்கு மேல் சேர்ந்துள்ளன. தமிழகத்திலே பிச்சைக்காரர்கள் அலைவதற்கும் ஐந்து அல்லது ஏழு வருடங்களுக்குள் மறுவாழ்வு அளிப்பதென்று தமது அரசாங்கம் முயற்சி செய்வதாயும் அதற்கு பொதுமக்களும் மத்திய அரசும் உதவிசெய்யவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

"தெருவிலே பிச்சைக்காரர் யாரும் இருப்பின் அது அந்த நாட்டு அரசாங்கத்துக்குப் பெரும் இழுக்காகும்" என்று சரியாகக் கூறுகிறார் தமிழக முதல்வர். படிப்படியாக இதைத் தீர்க்கப்போவதாகவும் முதலில் 2250 தொழுநோயாளரான பிச்சைக்காரர்களுக்கு 3 விடுதிகளை அரசாங்கம் அமைத்து அவர்களைப் பராமரிக்கப் போவதாகவும், இவ்வருடத்துக்குள் மேலும் 3 விடுதிகளை அமைத்து மொத்தம் 8000 தொழுநோயாளரான பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு அளிக்க இருப்பதாகவும் முதலமைச்சர் அறிவித்துள்ளது போற்றத்தக்கது. தமிழகத்தில் பிச்சை எடுத்துத்தான் ஜீவனம் நடத்தவேண்டுமென்ற நிலை யாருக்கும் இல்லாதவாறு முதலமைச்சர் செய்வாராயின் அவர் உண்மையில் 'கருணாநிதி' யாவார். அவரது பெயர் பொன்னெழுத்தால் பொறிக்கப்படும்.

## விவசாயிகள் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

கமறிகுடா 5-ம் வாய்க்கால் மத்திய வகுப்பு விவசாயிகளது மேட்டு நெற்காணிகளில் மண்ணெடுத்து அதே வாய்க்காலிலுள்ள கமங்களுக்குப் போடலாம். அப்படியானால் சுமார் 200 ஏக்கர் நெற்காணிகளிலும் 10 ஆயிரம் புசல் நெல்லை இவ்வருடமே மேலதிகமாகச் [illegible] பெறமுடியும்"

இவ்வாறு கூறும் மகஜரை கமறிகுடா 5-ம் வாய்க்கால் கமக்காரர் சங்கம் மரந்தன் பயிர்ச் செய்கைக் குழுவுக்கும் வடபிராந்திய கமத் தொழில் உதவியாணையாளருக்கும் அனுப்பியுள்ளது.

உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் ஏற்றகாணி வடக்குக் காட்டில் இருப்பதாகவும் அக்காணியைப் பரீட்சார்த்த முறைப்படியாயினும் வழங்கும் படியும் அம்மகஜரில் கேட்டுள்ளார்கள். (குவிம)

......

## கந்தபுராணப் படிப்பு

தாவடி, செவ்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகிறது. இளைப்பாறிய வங்கிப் பிரதம லிகிதர் திரு சி சின்னத்துரை, திரு சி சின்னத்தம்பி, திரு செ சோதிநாதன், பண்டிதர் திரு செ சிவப்பிரகாசம் ஆகியோர் புராணபடனத்தில் கலந்து சிறப்பித்து வருகிறார்கள்.

......

## 'நடவடிக்கை எடுக்கவும்'

குருநகர், செவ்வாய்

தீவுப்பகுதியில் இயங்காத நிலையில் இருக்கும் கிராம முன்னேற்றச் சங்கங்களை உடன் புனருத்தாரணம் செய்து இயங்கவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா.பொ. ரத்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

......

## பின்போடப் பட்டது

அரியாலை, செவ்வாய்

சிங்கள — தமிழ் ஆசிரியருக்கான இவ்வாண்டு பரீட்சை ஜூன் 17-ம்திகதி நடைபெற இருந்தது. தற் சமயம் இப்பரீட்சை பின் போடப்பட்டுள்ளது. பரீட்சைக்கான புதிய திகதியை பரீட்சைப் பகுதி பின்னர் அறிவிக்கும்

### மணிவாக்கு

பகைவர் அயலோர் நட்பினர் என்னும் இம் மூவகையோரிடத்தும் தருமத்தின் வழுவாமல் ஒப்பநிற்றல், நடுவுநிலைமை எனப்படும்.

—நாவலர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

பிரஜோற்பத்தி விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 2 - திகதி (16-6-71)


## புங்குடுதீவு மக்கள் அவதி

புங்குடுதீவிலே மக்கள் குடிதண்ணீருக்கு அவதிப்படுவதாகவும் ஒரு குடம் நீருக்கு 25 சதம் வீதம் கொடுத்து வாங்குவதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது. இது கவலை யளிப்பதாகும். அங்கு மட்டுமன்றி பொதுவாக தீவுப்பகுதிகளில் குடிதண்ணீருக்கு அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டு மக்கள் சங்கடப்படுவது வழக்கமாகிவிட்டது. புங்குடுதீவு தண்ணீர் திட்டத்துக்கென்று ஒன்றரை லட்சம் ரூபாய், சென்ற அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டதெனினும் இதுவரை அத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. காரணமென்ன? பொதுமக்களின் உயிர்போன்ற இவ்விஷயத்தில் எக்காரணம் பற்றியும் அசமந்தமாக இருப்பது பெரும் குற்றமும் பாவமுமாகும்.

இப்பிரச்னை குறித்து ஆராய்வதற்கான ஒரு மகாநாட்டை ஊர்காவற்றுறையில் நடத்த ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிகிறது. யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவை உதவி அதிகாரி இதற்கான ஒழுங்குசெய்திருப்பதாகவும், ஊர்காவற்றுறைப் பட்டின சபைத்தலைவர், புங்குடுதீவு கிராமசபைத் தலைவர், எழுவைதீவு கிராமசபைத் தலைவர், காரைநகர் தெற்குகிராம சபைத்தலைவர் உட்பட பொறுப்புள்ள பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு இம்முக்கிய பிரச்னைபற்றி ஆராயப் போவது வரவேற்கத்தக்கது. வெறும் பேச்சுடன் இது முடிந்துவிடாமல், தீவுப்பகுதி மக்களுக்கு தட்டுப்பாடில்லாமல் குடிநீர் எப்போதும் கிடைக்கக்கூடிய ஒழுங்கு செய்யப்படுமென்றே சம்பந்தப்பட்ட மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்.

புங்குடுதீவு, எழுவைதீவு, தோப்புக்காடு ஆகிய கிராமங்களுக்கு சமூக சேவைப்பகுதியினர் வருடாவருடம் தண்ணீர் வழங்கிவந்ததாகவும் இவற்றுக்குச் செலவிடும் தொகையை உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் குழாய்த் திட்டத்துக்குச் செலவிட்டால் தண்ணீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண முடியுமென்று சமூக சேவை அதிகாரி திரு நாகராசா அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயம்பற்றி மேற்குறித்த மகாநாட்டில் ஆலோசனை செய்வதுடன், யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் அப்பகுதிகளுக்கு நேரில் அழைத்து மக்கள் படும் அவதியை நேரில் காணச்செய்தால் அவரது ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் இதற்கு ஒருநல்ல விமோசனம் பிறக்கக் கூடும்.

## காமன்வெல்த் பிரச்னை

காமன்வெல்த்தினத்தை முன்னிட்டு அதன் தலைவரான மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியார் விடுத்துள்ள ஒரு செய்தியில் கிறிஸ்மஸ் தினம் குடும்பங்கள் யாவையும் ஒன்று சேர்க்கும் பெருநாளாக இருப்பது போல், காமன்வெல்த் தினமும் சந்திப்புகளை ஏற்படுத்தி அளவளாவும் நன்னாளாக இருக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துள்ளார். இம் மேலான விருப்பம் நிறைவேறுமாயின், காமன்வெல்த் குடும்பத்தில் இன்று தோன்றியுள்ள பல சிக்கல்களும் நல்லபடியாகத் தீர வழிபிறந்து, குடும்பம் வலப்பட வழி பிறக்கும்.

உதாரணமாக இன்று கிழக்கு பாகிஸ்தான் பிரச்னை லட்சக்கணக்கான மக்களின் வாழ்வை சீர்குலைத்து திகைக்க வைக்கின்றது. இதை எவ்விதம் நல்லபடியாகத் தீர்ப்பதென்று தெரியவில்லை. பாகிஸ்தான் அதிகாரிகளால் மட்டும் இதைத் தீர்க்க முடியாது. இது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்னையே யென்றாலும், இதை நல்லபடியாகத் தீர்ப்பதற்கு, காமன்வெல்த் நாடுகளுக்கும் ஒரு பொறுப்புண்டு. அவ்விதம் செய்யாமல் ஒதுங்கி இருப்பின், இந்தியா-பாகிஸ்தான் சண்டை ஏற்படவும், அமைதி குலைந்து, காமன்வெல்த் குடும்பமே சின்னா பின்னப்பட்டு சிதைந்துவிடவும் கூடும்.

மகாராணி அவர்கள் கூறியதுபோல், ஒருநாளில் மட்டும் காமன்வெல்த்தைச் சேர்ந்த நாடுகள் கூடி "அளவளாவிவிட்டு" கலைவதால் விரும்பத்தக்க பலன் கிடைக்கமுடியாது. உதாரணமாக இச்சமயத்தில் அவ்விதம்கூடினாலும், இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வரா என்பது மிகவும் சந்தேகம். கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையை கவனிக்கும்போது, இது இந்தியா-பாகிஸ்தான் சண்டையில் முடியுமோ என்று அஞ்சும் அளவுக்கு ஆபத்தாகிவருவதை உணரலாம். காமன்வெல்த் நாடுகளுக்குள் இன்னும் எவ்வளவோ சிக்கல்கள் இருப்பதுடன், அவற்றினிடையே விரும்பத்தக்க ஒத்துழைப்பில்லை. காமன்வெல்த் பற்றி எந்தப் பிரச்னையையும் இக்குடும்பத்துக்குள்ளாகவே பேசித்தீர்த்துக் கொள்வதென்று ஓர் ஏற்பாடு செய்துகொள்ள முடியாதா? இது, சம்பந்தப்பட்ட நாடுகளின் உள்நாட்டுப் பிரச்னையில் பிறர் தலையிடுவதாகாது. ஜனநாயக ஆட்சிமுறையில் ஏற்படும் சிக்கல்களை அவ்வப்போது காமன்வெல்த் நாடுகள் கூடி சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடிவதில்தான் இக்குடும்பம் பலப்பட்டு செழித்து வாழமுடியும்.

## திருவிழா

ஒட்டுசுட்டான், செவ்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோவிலின் வருடாந்த திருவிழா இம்மாதம் 23-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 8-ந் திகதி தீர்த்தத்துடன் முடிவடையும்.

## விரைவில் காரைநகருக்கு உபதபால் நிலயம்

ஊரதீவு, செவ்வாய்

காரைநகர் துறைமுகத்தில் "பி" தரமுடைய உபதபால்கந்தோர் ஒன்று வெகுவிரைவில் அமைக்கப்படவிருப்பதாக வடபகுதி தபாலந்தி அத்தியட்சகர் இலங்கை நேசர்வே அபிவிருத்தித்திட்ட (காரைநகர்) பொதுநலப்பணியாளர் திரு க. வீரகத்திப்பிள்ளைக்குஎழுதிய கடிதத்தில் உறுதிமொழித்துள்ளார்.

இவ்விடத்தில் உபதபால் கந்தோர் ஒன்று நிறுவுமாறு கடந்த பலகாலமாக வட்டுக்கோட்டை எம்.பி திரு அ. தியாகராசா, தோப்புக்காடு கிராம முன்னேற்றச்சங்கம் தோப்புக்காடு நல்லொழுக்க வாலிபர் கழகம் திரு க. வீரகத்திப்பிள்ளை ஆகியோர் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தனர்.

முத்தையன்கட்டில்

## உப உணவு உற்பத்தி

ஒட்டுசுட்டான், செவ்.

முத்தையன் கட்டு குடியேற்றத்திட்டத்தில் இம்முறை பெருமளவில் மிளகாய் வெங்காயம் பெரிய வெங்காயம் போன்ற உப உணவுப் பொருள்கள் செய்கைபண்ணப்படுகின்றன. கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறை சாகுபடி அதிகரிக்குமென நம்பப்படுகின்றது.

......

## ஜூலை 29-ல் பரீட்சை

அரியாலை, செவ்வாய்

இலங்கைப் பரீட்சைப் பகுதி நடத்தும் ஏழாம்வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஜூலை 29-ம் திகதி நடைபெறவுள்ளது.

......

## சிரமதானம்

தாவடி, செவ்வாய்

மாரீசன்கூடலைச் சேர்ந்த வீதியொன்றை இளவாலை கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சிரமதான மூலம் செப்பனிட்டனர்.

......

## கணித ஆசிரியர் சேவைக்காலம் நீடிக்கப்படும்

கோட்டை, செவ்.

கணக்காசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக கல்வி அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால கணக்குப் போதிக்கும் பட்டதாரிகளது சேவைக்காலம் நீடிக்கப்படும் எனத்தெரிவித்துள்ளார்.

கணக்கு விஞ்ஞானம் ஆகியபாடங்களில் ஆசிரியர்களது சேவைக்காலமும் நீடிக்கப்படும் என திரு. சுமதிபால மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் கம்பனியாருக்காக யாழ்ப்பாணம் பிரவுண் வீதி 63-ம் இலக்கத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

"ஏழைகள்

## உழைக்கமட்டும்பிறக்கவில்லை வாழப்பிறந்தவர்கள்"

— எம். ஜி. ஆர்.

சென்னை, ஜூன் 25

"ஏழைகள் உழைக்கமட்டும்தான் பிறந்தவர்கள் என்று கழக அரசு நிர்த்தாட்சண்யமாக இருக்கவில்லை அவர்கள் வாழப்பிறந்தவர்கள் என்பதை நினைவில் கொண்டிருக்கிறது. ஏழைகளுக்கு உண்ண உணவும் இருக்க வீடும் வேண்டும். அவர்கள் வசதியாக வாழவேண்டுமென்றே கழக அரசு விரும்புகிறது. இந்த எண்ணம் பிறருக்கு எந்தவகையில் அதிருப்தியை ஊட்டினாலும் அதனால் ஆவேசம்தான் உண்டாகும்"

இவ்வாறு பறங்கிமலைத் தொகுதி எம் எல் ஏ திரு எம் ஜி ராமச்சந்திரன் கூறினார்.

சென்னையை அடுத்துள்ள திருவான்மியூரில் லட்சுமிபுரம் கொலனியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்குழாய் திறப்புவிழாவும் ஹரிசனமக்களுக்கு கட்டப்பட்டுள்ள வீடுகளின் திறப்புவிழாவும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே எம் ஜி ராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

எம் ஜி ராமச்சந்திரன் மேலும் பேசுகையில் எல்லோருக்கும் பொதுவான கடவுள் வாழும் கோவிலிலே தீண்டத்தக்கவன் தீண்டத்தகாதவன் என்ற பேதங்களை கற்பித்தால் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று சொல்ல முடியாது. தி மு க ஆட்சி கோயில் கூடாதென்றதில்லை. கடவுளை நம்புகிறவர்கள் நம்பட்டும் என்றுதான் விலகிநிற்கிறது என்றார்

## புகார்

ஊரதீவு, செவ்

காரைநகர் ஊர்காவற்றுறை ஆகிய பகுதிக் கரையோரங்களான தம்பாட்டி ஊரி. பரவோலை ஆகிய இடங்களில் தாம் போடும் வலைகள் திருடப்படுவதாக இப்பகுதி மீனவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

இதுசம்பந்தமாக காவல் அதிகாரிகள் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

......

## வீதி புனரமைப்பு

குருநகர் செவ்வாய்

கடந்த பலகாலமாகச் சீரற்ற நிலையிலிருந்து வந்த யாழ் நகர 5-ம் வட்டார திட்டியில் இருக்கும் இராஜலிங்கம் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இவ் வீதியை அகலித்து திருத்துவதற்கு இப்பகுதி மக்கள் தங்கள் காணிகளை விட்டுக்கொடுத்து உதவியுள்ளனர்.

......

உபதபால் நிலயம்

## கட்டுடையிலேயே நிறுவப்படும்

யாழ்ப்பாணம், புதன்

கட்டுடை உபதபால் நிலையம் கட்டுடையிலேயே அமைக்கப்படும் என தபால் அமைச்சரை நேரில் சந்தித்துப் பேசிய மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. சி. முதலியாரிடம் அமைச்சர் தெரிவித்தார். முதலில் கட்டுடை உபதபால்நிலையம் என்ற பெயருடன் இவ்வுபதபால் நிலையம் சண்டிலிப்பாயில் அமைக்கப்படவிருந்ததாம். இதனை மானிப்பாய் பட்டினசபையும் மற்றும் பொதுமக்களும் ஆட்சேபித்திருந்தனர். இந்த உபதபால்நிலையம் இனி கட்டுடையிலேயே அமைக்கப்படும்.

......

## படுக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எறிந்ததைத் தாம் கண்டதாகக் கூறினர்

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் 7-ந் திகதி அனுமதிக்கப்பட்டிருந்த அப்புகாமி 9-ந் திகதி யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு 12-ந் திகதி மரணமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி கொலை எனத் தீர்ப்பளித்து சந்தேக நபரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

## நேர்முகப் பரீட்சை

கோட்டை, செவ்வாய்

இரண்டாம்தரத் தலைமை ஆசிரியர்களுக்கான கடைசி நேர்முகப் பரீட்சை அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறும் கல்வி அமைச்சில் நடைபெறவிருக்கும் இந்நேர்முகப் பரீட்சையில் சுமார் 4000 ஆசிரியர்கள் கலந்து கொள்ளுவர்

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

சுருவில் றோ. க. த. க. பாடசாலையின் தலைமை ஆசிரியராயிருந்து. இளைப்பாறிய திரு என் கந்தையாவையும் ஆசிரியர் திரு ஆ. யாதவராயரையும் கௌரவிக்கு முகமாக மேற்படி பாடசாலைப் பெற்றோர் ஆசிரியசங்கம் சேவை நலம் பாராட்டுவிழா நடாத்தத் தீர்மானித்துள்ளது அதற்கான ஏற்பாடுகள் திரு க. சிவசம்பு தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களது சேவையை முன்னிட்டுப் பொன்முடிப்பு அளிப்பதெனவும் செய்யப்பட்டுள்ளது.

......

## 2 வீடுகள் நாசம்

திருக்கோணமலை, செவ்.

தேனீர் வைத்துக் கொண்டிருந்தபோது தீ ஓலைத் தட்டியில் பிடித்ததால் 2 வீடுகள் தீக்கிரையாகின திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மல்லைத் தீவில் இச்சம்பவம் நிகழ்ந்தது

வேலைத் தளத்திலிருந்து திரும்பிய தாயாருக்கு தேனீர் தயாரிக்க மகள் சென்றபோது வீடு தீப்பற்றிக்கொண்டது

## பொருட்களை இலகுவில் பெற வசதி

கோட்டை, செவ்வாய்

அத்தியாவசியத் தேவைப் பொருட்களைப் பொதுமக்கள் இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் விரைவில் அமுல் நடத்தவிருக்கிறது.

இது சம்பந்தமான பயிற்சி வகுப்பு ஒன்று இம்மாதம் 18ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. 160 விசேஷ உத்தியோகத்தர்களுக்கு இந்தப் பயிற்சியளிக்கப்படும். 56 பேர் ஏற்கனவே நியமனம் பெற்றுள்ளனர்.